ONE TWO ACADEMY

12 - ஆம் வகுப்பு

தமிழ்

இயல் - 3

மதிப்பெண்கள்:-50 **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.

அ) அன்பும் அறனும் உடைத்தா யின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்.

2. கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவி
ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி

3. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன் , குகன்

இ) இராமன் , சுக்ரீவன் ஈ) இராமன் , சவரி

4. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

5. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை .....

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

6. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

7. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை ' - 'அன்பும் அறனும்' இலக்கணக் குறிப்பு

அ) உம்மைத்தொகை ஆ) எண்ணும்மை

இ) உவமைத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

8. பூமணி எழுதிய புதினங்கள்

அ) வரப்புகள், வயிறுகள் ஆ) அஞ்ஞாடி, அறுப்பு

இ) வரப்புகள், அஞ்ஞாடி ஈ) பிறகு, வயிறுகள்

9. உரிமைத்தாகம் என்ற சிறுகதையின் ஆசிரியர்

அ) புதுமைப்பித்தன் ஆ) பூமணி

இ) உத்தமசோழன் ஈ) சுஜாதா

10. ஜலாலுத்தீன் ரூமி ..... மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவர்.

அ) பாரதத்தின் ஆ) கிரேக்கத்தின்

இ) பாரசீகத்தின் ஈ) ஆப்ரிக்காவின்

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் **8 X 2 = 16**

11. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

12. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.

13. செல்லிடத்து - புணர்ச்சி விதி கூறுக.

14. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

15. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.

16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

17. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

18. **பொருள் கூறுக.**

வெகுளி, புணை, ஏமம், திரு

19. **பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**

அனைவர் அன்பு அழைத்த வன் துன்பம் தர யார் மனம் வரும்.

20. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லாபிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள் .

III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8

21. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

22. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

23. அன்பும் அறனும் உடைத்தா யின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

24.குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

25.பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் , பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

26.'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணை யாமல் இருந்திருந்தால்..... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க..

27.செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.